©
GOVERNMENT OF TAMIL NADU
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 16.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 181A] சென்னை, வியாழக்கிழமை, மார்ச் 24, 2022
பங்குனி 10, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு-2053

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

பொருளடக்கம்

| சட்டமுன்வடிவுகள்: | பக்கங்கள் |
|---|---|
| எண். 17/2022—தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்தச்) சட்டம் .. .. .. .. .. | 2-6 |
| எண். 18/2022—தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) (திருத்தச்) சட்டம் .. | 7-8 |
| எண். 19/2022— தமிழ்நாடு ஆவண எழுத்தர்களின் நலநிதியச் சட்டம் .. .. | 9-22 |
| எண். 20/2022—தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல திருத்தச் சட்டம். .. .. | 23-28 |
| எண். 21/2022—தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 2)ச் சட்டம் | 29-35 |
| எண். 22/2022—தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு)ச் சட்டம் .. | 36-42 |

**2022 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 17/2022**

***2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022– ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும், அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

2. (இதன்பின்பு இதில் 'முதன்மைச் சட்டம்' எனக் குறிப்பிடப்படுவதான) 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டத்தின் 2–ஆம் பிரிவில்– தமிழ்நாடு சட்டம் 42/2017.

(1) (c)–ஆம் கூறிற்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(c) நில உரிமையாளர் அல்லது குத்தகைதாரர் அல்லது வேறு எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும், "சொத்து உரிமையாளர்" என்பது வளாகமானது வாடகைதாரர் ஒருவருக்கு வாடகைக்கு விடப்பட்டிருக்குமானால், தமக்காக, வளாகம் எதனின் வாடகையை பெறுகிற அல்லது பெறுவதற்கு உரிமையுடையவராய் இருக்கிற நபர் ஒருவர் என்று பொருள்படும், மற்றும்–

(i) அவரின் வாரிசு உரிமையர்;

(ii) ஒரு ஒப்பந்தத்தில் ஈடுபடமுடியாத இளவர் அல்லது மனச்சீர்கேடுற்றவர் போன்ற அத்தகைய பிற நபர் எவருக்காக அல்லது அவர் சார்பாக அல்லது அவரின் நலனுக்காக, வளாகம் எதனின் வாடகையை பெற்றுவருகிற அல்லது பெறுவதற்கு உரிமையுடையவராய் இருக்கிற பொறுப்புக்கட்டளையர் அல்லது காப்பாளர் அல்லது சொத்தைப் பேணுநர் ஒருவரை உள்ளடக்குதல் வேண்டும்;

(2) (f) கூறில், "அல்லது கல்விக்காக" எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

3.(m) கூறிற்கு பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(mm) "உள் வாடகைதாரர்" என்பது தற்போதுள்ள வாடகை உரிமை உடன்பாட்டிற்கு ஒரு துணை உரிமை உடன்பாட்டில் செய்யப்பட்ட அதன்பகுதி எதிலும் அல்லது வாடகை உரிமை உடன்பாட்டின் படி சேர்ந்தடைந்த அவரின் உரிமைகளை குறித்தளித்த அல்லது உரிமை மாற்றம் செய்த அல்லது அவர் கைவசம் வைத்துவரும் வளாகங்கள் முழுவதையும் அல்லது அதன் பகுதியை உள்வாடகைக்கு, வாடகைக்கு விடும் நபர் ஒருவர் என்று பொருள்படும்;".

3. முதன்மைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– 7 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

“7. உள்வாடகை மீதான கட்டுப்பாடு.– (i) இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு பின்பு, வாடகைதாரர் எவரும், தற்போதுள்ள வாடகை உரிமை உடன்பாட்டிற்கு ஒரு துணை உரிமை உடன்பாட்டினை செய்வதைத் தவிர,–

(a) வாடகைதாரர் ஒருவர் என்ற முறையில் அவர் கைவசம் வைத்து வரும் வளாகம் முழுவதையும் அல்லது அதன் பகுதியை உள்வாடகைக்கு விடுதல் ஆகாது;

(b) வாடகை உரிமை உடன்பாட்டில் அல்லது அதன்பகுதி எதிலும் உள்ள தம்முடைய உரிமைகளை உரிமை மாற்றம் செய்தலோ அல்லது குறித்தளித்தலோ ஆகாது.

(2) (1) ஆம் உட்பிரிவின்படி குறித்துரைக்கப்பட்டவாறான தற்போதுள்ள வாடகையுரிமை உடன்பாட்டிற்கு ஒரு துணை உரிமை உடன்பாட்டினை செய்து, வளாகங்களை உள்வாடகைக்கு விடும்போது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில், அத்தகைய உடன்பாட்டினை நிறைவேற்றும் தேதியிலிருந்து இரண்டு மாதங்கள் காலத்திற்குள் உள்வாடகையைப் பற்றி வாடகை அதிகாரியிடம் சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர் இணைந்து தெரிவித்தல் வேண்டும்.”.

4. முதன்மைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவில், (5) ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் உட்பிரிவு மற்றும் விளக்கமானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:– 15 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

“(6) வாடகைக்கு விடப்பட்ட வளாகமானது பேரிடர் நிகழ்வு ஒன்றின் காரணமாக, வாடகைதாரருக்கு வாழத்தகுதியற்றதாகும் போது அல்லது அத்தகைய நிகழ்வின் காரணமாக வாடகைதாரரால் வசிக்க இயலவில்லையெனில், இந்தப் பிரிவின் வகைமுறைக்குட்பட்டு, கூறப்பட்ட வளாகமானது வாழத்தகுதியுடையதாக சொத்துரிமையாளரால் மீண்டும் உருவாக்கும் வரை வாடகைதாரரிடமிருந்து சொத்துரிமையாளர் வாடகை வசூலிக்கக்கூடாது;

வரம்புரையாக, (5) ஆம் உட்பிரிவில் அல்லது இந்த உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு வாடகைக்கு விடப்பட்ட வளாகமானது வாழத்தகுதியற்றதாயாகும் போது மற்றும் அதனை வாழத்தகுதியுடையதாகச் செய்வதற்கு தேவையான பழுது பார்த்தலை சொத்துரிமையாளர் செய்யத் தவறிவிட்டாரானால் அல்லது கூறப்பட்ட வளாகம் வாழத்தகுதியானதாக மாற்ற முடியவில்லையெனில், பிணைய வைப்பீடு மற்றும் முன்பணமானது, வாடகைதாரரின் கடப்பாடு ஏதேனுமிருப்பின் அதனை உரியவாறு கழித்தப்பின்பு, அறிவிப்பு காலம் முடிவடைந்ததின் பதினைந்து நாட்கள் காலஅளவிற்குள் வாடகைதாரருக்கு, சொத்துரிமையாளரால் திருப்பி அளிக்கப்படுதல் வேண்டும்.

விளக்கம்.– இந்தப்பிரிவின் நோக்கத்திற்காக, “பேரிடர்” என்பது வாடகைக்கு விடப்பட்ட வளாகத்தில் வாடகைதாரரின் வாழ்விடத்தை பாதிக்கும், போர் நிலைமை, வெள்ளம், வறட்சி, தீ புயல், நில நடுக்கம் அல்லது இயற்கையால் ஏற்படுகிற வேறு ஏதேனும் பேரிடர் என்று பொருள்படும்.”.

5. முதன்மைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில் 17 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

“வாடகைதாரருக்கு எழுத்து வடிவிலான அறிவிப்பு வழங்கியதற்கு இணங்கிய வகையில், வளாகம் ஒன்றினுள் நுழையலாம்”, எனும் சொற்றொடருக்காக, “எழுத்து வடிவிலோ அல்லது மின்னணு முறையின் மூலமாகவோ வாடகைதாரருக்கு அறிவிப்பு ஒன்றை வழங்கியதன் பின்பு வாடகைக்கு விடப்பட்ட வளாகத்தினுள் நுழையலாம்” என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

19 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

6. முதன்மைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

“19. சொத்து மேலாளரின் கடமைகள் மற்றும் கடமைகளை மீறுவதனால் ஏற்படும் விளைவுகள்.— (1) சொத்து மேலாளரின் கடமைகளானவை பின்வருவனவற்றை உள்ளடக்கும், அதாவது:—

(a) பற்றுச் சீட்டின் பெயரில் வாடகை வசூலித்தல்;

(b) சொத்து உரிமையாளரின் சார்பாக தேவையான பழுதுகளை சரி செய்தல்;

(c) அவ்வப்போது, வளாகங்களை ஆய்வு செய்தல்;

(d) வாடகைதாரருக்கு.—

(i) வளாகங்களை முறையாகப் பராமரித்தல்;

(ii) வாடகையை கொடுப்பதில் தாமதம்;

(iii) வாடகையை திருத்தியமைத்தல்;

(iv) வளாகங்களை காலி செய்தல்; மற்றும்

(v) வாடகை உரிமையை புதுப்பித்தல்

ஆகியவற்றிற்கான அறிவிப்புகளை வழங்குதல்;

(e) வாடகைதாரர் மற்றும் சொத்துரிமையாளர்களுக்கு இடையேயான மற்றும் வாடகைதாரர்களுக்குள் ஏற்படும் பூசல்களைத் தீர்த்துவைக்க உதவுதல்;

(f) சொத்துரிமையாளரின் அறிவுரைகளின்பேரில் மட்டுமே செயல்படக்கூடிய வாடகை தொடர்பான பிற பொருட்பாடுகள் எதுவும்.

(2) (1) ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்கு முரணாக அல்லது சொத்துரிமையாளரின் அறிவுரைகளுக்கு எதிராக சொத்து மேலாளர் செயல்படும்போது, வாடகை அதிகாரியானவர், அதன் சார்பாக சொத்துரிமையாளர் அல்லது வாடகைதாரரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், அத்தகைய முரண்பாட்டின் காரணமாக சொத்துரிமையாளர் அல்லது வாடகைதாரருக்கு ஏற்பட்ட இழப்பு எதனையும் ஈடுசெய்வதற்காக சொத்து மேலாளர் மீது அத்தகைய செலவுகளை விதிக்கலாம் அல்லது சொத்து மேலாளரை நீக்கலாம்.”.

21 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

7. முதன்மைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவில்,

(1) (1) ஆம் உட்பிரிவில், “வாடகையுரிமை உடன்பாடு தொடருதல்” எனும் சொற்றொடருக்காக, “வாடகையுரிமை தொடருதல்” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2) ஆம் உட்பிரிவில்,—

(a) (g) கூறானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(b) (h) கூறிற்கு பின்பு, பின்வரும் கூறுகளானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

“(i) 8 ஆம் பிரிவின் கீழ் செலுத்தப்படும் வாடகையினை செலுத்த அந்த வாடகைதாரர் ஒப்புக்கொள்ளவில்லையெனில்,”

(j) சொத்துரிமையாளரின் எழுத்து வடிவிலான ஒப்புதலின்றி வாடகைக்கு விடப்பட்ட வளாகங்களில், கட்டமைப்பு மாற்றங்கள் எதனையும் அல்லது நிரந்தர கட்டமைப்பு எதனையும் வாடகைதாரர் அமைப்பாராயின்.”,

8. முதன்மைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– 22 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

"22. சொத்துரிமையாளர் இறக்கும் நேர்வில் வளாகங்களின் உடைமையை மீண்டும் பெறுதல் மற்றும் வெளியேற்றுதல்.–

(1) இந்தச் சட்டத்தில் அல்லது தற்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியிருப்பது எவ்வாறிருப்பினும், சொத்துரிமையாளர் இறப்பின் நேர்வில், வாடகை காலத்தின் போது சொத்துரிமையாளரின் வாரிசுரிமைகளினால் வாடகைக்கு விடப்பட்ட வளாகத்தின் ஒரு உண்மையான தேவை இருக்குமிடத்து, அத்தகைய வாரிசுரிமைதாரர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும் படிவத்திலும் வாடகை நீதிமன்றத்தின் முன்பு கூறப்பட்ட வளாகங்களின் உடைமையை மீண்டும் பெறுதல் மற்றும் வெளியேற்றுதலுக்காக அதன் பொருட்டு ஒரு விண்ணப்பத்தினை தாக்கல் செய்யலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட விண்ணபத்தின் பேரில், இறந்து போன சொத்துரிமையாளரின் வாரிசுரிமைதாரர்கள், வாடகைக்கு விடப்பட்ட வளாகங்களில் உண்மையான தேவை இருப்பதாக மனநிறைவடைந்தால், இறந்துபோன சொத்துரிமையாளரின் வாரிசுதாரர்களுக்கு கூறப்பட்ட வளாகத்தின் காலி உடைமைகளை ஒப்படைப்பதற்காக வாடகைதாரருக்கு எதிராக தேவையான ஆணைகளை வாடகை நீதிமன்றமானது பிறப்பிக்கலாம்.".

9. முதன்மைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவில், "மற்றும் சட்டத்தின் 20" என்ற சொற்றொடருக்காக, "சட்டத்தின் 19 அல்லது 20" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 31 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**நோக்கக் காரண விளக்கவுரை**

2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டமானது, (தமிழ்நாடு சட்டம் 42/2017) வளாகங்களின் உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களுக்கிடையே செய்த ஒப்பந்தத்தின் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி வாடகையை ஒழுங்குமுறைப்படுத்துவதையும், சொத்துரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை சமநிலைப்படுத்துவதையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது, கூறப்பட்ட சட்டமானது, அனைத்து வாடகை ஒப்பந்தங்களின் கட்டாய பதிவிற்கு வகைசெய்கிறது.

2. புதிய சட்டங்களை இயற்றுவதன் மூலமாகவோ அல்லது அதனை விளைவிக்க தற்போதுள்ள வாடகை சட்டங்களை தக்கவாறு திருத்தம் செய்வதன் மூலமாகவோ, அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றிய ஆட்சிப் பகுதிகளினால் ஏற்றுக்கொள்வதற்காக, 2021 ஆம் ஆண்டு மாதிரி குடிவாரச் சட்டத்திற்கு 2021 ஜூன் 2 அன்று, ஒன்றிய அரசானது ஒப்புதல் அளித்தது. 2021 ஆம் ஆண்டு மாதிரி குடிவாரச் சட்டத்தில் வழங்கப்பட்ட சில ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு, 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டத்தினை தக்கவாறு திருத்தம் செய்வதென அரசானது முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சு. முத்துசாமி,**
*வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர*
*வளர்ச்சித் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 மார்ச் 24.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

**2022 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 18/2022**

***1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் எழுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 11/1971.

2 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில், (*a*) கூறிற்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(*a*) "வாரியம்" என்பது 34 ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பெற்ற தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று பொருள்படும்.".

அத்தியாயம் VIII—இன் தலைப்பிற்கான மாற்றீடு

3. முதன்மைச் சட்டத்தின் அத்தியாயம் VIII—இல் "குடிசைப்பகுதி மாற்று வாரியம்" எனும் தலைப்பிற்காக, "நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்" எனும் தலைப்பானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

34 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவில்,—

(1) "குடிசைப்பகுதி மாற்று வாரியத்தினை நிறுவுதல்" எனும் ஓரத்தலைப்பிற்காக, "நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தினை நிறுவுதல்" எனும் ஓரத்தலைப்பானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (1) ஆம் உட்பிரிவில், "தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்" எனும் சொற்றொடருக்காக, "தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

சொற்றொடருக்கான மாற்றீடு.

5. முதன்மைச் சட்டத்தின் கீழ் செய்யப்படும் விதிகள் அல்லது அறிவிக்கைகள் எதிலும் காணப்படுகிற "தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்" எனும் சொற்றொடருக்காக, "தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 11/1971) நகர்ப்புர ஏழை குடும்பங்களுக்கு வீடு வாங்குவதற்கான வாய்ப்பளிப்பது உள்ளடங்கலாக அடிப்படை வசதிகளை வழங்குவதன் மூலம் குடிசைப்பகுதிகளை மேம்படுத்துதல், இந்தப் பகுதிகளை குடியிருக்கத்தக்கதாக மாற்றுதல் மற்றும் குடிசைப்பகுதிகளை மேம்படுத்த முடியவில்லை எனில் அத்தகைய பகுதிகளை அகற்றுதல் ஆகிய நோக்கங்களுடன் இயற்றப்பட்டது. குடிசைப்பகுதிகளை மேம்படுத்துதலே முதன்மையான செயல்பாடாக இருந்தாலும், "தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின்" பெயரீட்டு முறை, வாரியத்தின் செயல்பாடானது குடிசைப்பகுதிகளை அகற்றுவதுடன் மட்டுமே தொடர்புடையது என பரிந்துரைக்கிறது. கூறப்பட்ட வாரியமானது, ஏற்கனவே மேம்படுத்தப்பட்ட நகர்ப்புர வாழ்விடங்களில் மறுகுடியேற்றத்திற்கான வீடுகளை வழங்கிக்கொண்டிருக்கையில், மறுப்புக்கிடமான புறம்போக்கில் அமைந்துள்ள குடிசைப்பகுதிகள், நிலம் நிர்வகிக்கும் துறையினால் அகற்றுவதற்காக தற்போது எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

2. நகர்ப்புர ஏழை குடியிருப்பாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு, வீட்டு வசதி வாய்ப்பிற்கான தீர்வுகள் மட்டுமே போதுமானதாக இருக்காது என அரசு கருதுகிறது. குடிநீர், சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவ வசதி, திடக்கழிவு மேலாண்மை, பொது வெளியிடம், முதலிய அத்தகைய போதுமான நகர்ப்புர வசதிகளுடன் வீட்டு வசதித் தீர்வுகளானது பயன்படுத்தப்படுதல் தேவையானதாகிறது. அதற்கிணங்க, இந்த நோக்கத்தினைக் கருத்தில் கொண்டு, குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் அத்தகைய பகுதிகளின் முழுமையான வாழ்விட மேம்பாட்டிற்கு அரசானது முயற்சி செய்கிறது. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் முதன்மைப் பங்களிப்பானது, குடிசைப்பகுதிகளை அகற்றுதலுக்கு பதிலாக, குடிசைப்பகுதிகளை மேம்படுத்துதல், மற்றும் அவற்றை ஏற்புடைய வாழ்விடமாக மாற்றுதலே ஆகும் என்பதனால், அரசானது 01.09.2021 ஆம் தேதியிட்ட வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின், அரசாணை (நிலை) எண். 103–இன் மூலம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரீட்டு முறையை "தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்" என மாற்றியுள்ளது. வாரியத்தின் பெயரீட்டு முறையில் மேற்சொன்ன மாற்றத்திற்கு ஒரு சட்டப்பூர்வ அடித்தளத்தை வழங்குவதற்காக, 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (மேம்படுத்துதல் மற்றும் அகற்றுதல்) சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 11/1971) திருத்தம் செய்வதென அரசானது முடிவுசெய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

*தா.மோ. அன்பரசன்*
*குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்*
*நிறுவனங்கள் அமைச்சர்*

தலைமைச் செயலகம்,
*சென்னை,*
2022 மார்ச் 24.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

**2022 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 19/2022**

***மாநிலத்தில் ஆவண எழுத்தர்களின் பயனுக்காக நலநிதியமொன்றை அமைத்துருவாக்க வகை செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.***

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**1.** (1) இந்தச் சட்டம், 2022—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர்களின் நலநிதியச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாக குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2.** இந்தச் சட்டத்தின் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,— பொருள் வரையறைகள்.

(a) ‘‘குழு'' என்பது 4 ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு ஆவண எழுத்தர்களின் நலநிதியக் குழு என்று பொருள்படும்.

(b) ‘‘சார்ந்து வாழ்பவர்'' என்பது, இறந்த நிதிய உறுப்பினர் ஒருவரின் பின்வரும் உறவினர்கள் எவரேனும், அதாவது:—

(i) விதவை அல்லது மனைவியை இழந்தவர், உரிய வயதுவராத மகன், திருமணமாகாத மகள் அல்லது விதவைத் தாய்;

(ii) உறுப்பினர் இறந்தபோது, அவ்வுறுப்பினரின் வருமானங்களை முழுக்கச்சார்ந்து வாழ்ந்து வரும் நலிந்த நிலையிலுள்ள மற்றும் பதினெட்டு வயதை அடைந்துள்ள மகன் அல்லது திருமணமான மகள் ஆகியோர் என்று பொருள்படும்;

(c) ‘‘ஆவண எழுத்தர்'' என்பது, 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர்களின் உரிம விதிகளின் படி உரிமம் வழங்கப்பட்ட நபர் ஒருவர் என்று பொருள்படும்;

(d) ‘‘ஆவண எழுத்தர் சங்கம்’’ என்பது 17 ஆம் பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பதிவு பெற்ற ஆவண எழுத்தர் சங்கம் என்று பொருள்படும்;

(e) ‘‘நிதியம்'' என்பது, 3 ஆம் பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் நலநிதியம் என்று பொருள்படும்;

(f) ‘‘அரசு'' என்பது, மாநில அரசு என்று பொருள்படும்;

(g) ‘‘நிதிய உறுப்பினர்'' என்பது, இந்த சட்டத்தின் வகைமுறைகளின் படி நிதியத்தின் உறுப்பினராக நீடிக்கின்ற நிதியத்தின் பலன்களைப் பெற சேர்க்கப்பட்ட ஆவண எழுத்தர் ஒருவர் என்று பொருள்படும்;

(h) ''வகுத்துரைக்கப்பட்டது'' என்பது இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகள் என்று பொருள்படும்.

(i) ''மாநிலம்'' என்பது தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும்.

ஆவண எழுத்தர்களின் நல நிதியம்.

3. 1) அரசானது, அறிவிக்கை வாயிலாக, தமிழ்நாடு ஆவண எழுத்தர்களின் நல நிதியம் என்று அழைக்கப்பெறும் நிதியமொன்றை அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்,—

(a) 19 ஆம் பிரிவின்படி நிதியத்தின் உறுப்பினராக ஒருவரைச் சேர்ப்பதற்கு, ஆவண எழுத்தர்களிடமிருந்து வசூலிக்கப்படும் தொகைகள் அனைத்தும்;

(b) 1908 ஆம் ஆண்டு பதிவுச்சட்டத்தின் கீழ் சார்பதிவாளர் அலுவலகம் எதிலும் பதிவிற்காக முன்வைக்கப்பட்ட ஆவணத்தின் படி, வகுத்துரைக்கலாகும், ஐம்பது ரூபாய்க்கு மிகாத வீதத்தில் வசூலிக்கப்படும் தொகை அனைத்தும்; மையச் சட்டம் XVI/1908

வரம்புரையாக, மைய அரசு, மாநில அரசு அல்லது 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார அமைப்புகள் கேளிக்கை வரிச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (11) ஆம் கூறில் வரையறுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் பொருட்டு பதிவிற்காக முன்வைக்கப்பட்ட ஆவணம் எதற்கும் இந்த கூறானது பொருந்துதல் ஆகாது; தமிழ்நாடு சட்டம் 20/2017

ஆவண எழுத்தர் நலநிதியக் குழுவை நிறுவுதல்.

4. (1) அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, இதன்பொருட்டு குறிப்பிடலாகும் அத்தகைய தேதியன்றும், அது முதற்கொண்டும், 'தமிழ்நாடு ஆவண எழுத்தர் நல நிதியக் குழு' என்கிற பெயரில் குழுவொன்றினை நிறுவுதல் வேண்டும்.

(2) குழுவானது, நிலையான தொடர்பாட்டையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டுள்ள, சொத்தினை ஈட்டுவதற்கும் வைத்திருப்பதற்கும் உரிமை மாற்றம் செய்வதற்குமான அதிகாரத்துடன் கூடிய ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும் மற்றும் அதன் பெயரினால் வழக்கிடுதல் அல்லது வழக்கிடப்படுதல் வேண்டும்.

(3) குழுவில் பின்வருபவர்கள் அடங்கியிருத்தல் வேண்டும்,—

(a) பதிவுத்துறை தலைவர், பதிவுத்துறை—பதவி வழித் தலைவர்;

(b) கூடுதல் பதிவாளர் (சீட்டு) — பதவி வழி செயலாளர்;

(c) நேர்முக உதவியாளர் (சீட்டு ) — பதவி வழி பொருளாளர்;

(d) இயக்குநர், பதிவு பயிற்சி நிலையம் – பதவி வழி உறுப்பினர்;

(e) கணக்கு அலுவலர், பதிவுத்துறை தலைவர் அலுவலகம் — பதவி வழி உறுப்பினர்,

(f) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய அதிகார அமைப்பால் ஆவண எழுத்தர்களின் சங்கத்திலிருந்து, பெயர் குறித்து நியமிக்கப்படக்கூடிய நான்கு உறுப்பினர்கள்.

(4) (3) ஆம் உட்பிரிவின் (f) கூறின் படி நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர், மூன்று ஆண்டுகள் கால அளவிற்கு அல்லது அவர் ஆவண எழுத்தர்களின் சங்கத்தின் உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும் வரையில் இதில் எது முந்தியதோ அதுவரை பதவி வகித்தல் வேண்டும்.

குழுவின் நியமன உறுப்பினர்களை தகுதி நீக்கம் செய்தல் மற்றும் நீக்குதல்

5. (1) 4 – ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (f) கூறின் படி பெயர் குறித்து நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர், பின்வரும் காரணங்களால் குழுவின் உறுப்பினராக தொடர்வதற்கு தகுதியற்றவராகக் கருதி நீக்கம் செய்யப்பட வேண்டும். அவர்,–

(a) மனச்சீர்கேடுற்றவரானால்; அல்லது

(b) நொடித்த நிலையராகத் தீர்ப்பளிக்கப்பட்டவரானால்; அல்லது

(c) குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கும் அதிகமாக குழுவின் அனுமதியின்றி வராதிருப்பாரானால்:

வரம்புரையாக, இந்தக் கூறின் படி, பதவி நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர், தாம் வராமையை பிழைபொறுக்கக் கோரி விண்ணப்பம் அளித்தால் அத்தகைய உறுப்பினர் குழுவினால் மீண்டும் பதவியில் அமர்த்தப்படலாம்; அல்லது

(d) நிதியத்திற்கு பணம் செலுத்தத் தவறியவர் அல்லது குழுவிற்கு நம்பிக்கைக்கேட்டை செய்திருப்பாரானால்; அல்லது

(e) ஒழுக்கக்கேட்டை உள்ளடக்குகின்ற குற்றம்ள தற்காகவும், குற்றவியல் நீதிமன்றத்தினால் தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்டிருப்பவரானால்.

(2) அரசானது (1) ஆம் உட்பிரிவின்படி தகுதியற்றவர் அல்லது தகுதியற்றவராகிற உறுப்பினர் எவரையும் குழுவின் உறுப்பினர் தகுதியிலிருந்து நீக்கலாம்:

வரம்புரையாக, அவரது தரப்பினை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பொன்றை வழங்கினால் அன்றி, உறுப்பினர் எவரையும் நீக்குவதற்கான ஆணை வழங்கப்படுதல் ஆகாது.

குழுவின் நியமன உறுப்பினர்கள் பதவி விலகுதல் மற்றும் தற்காலிக காலியிடங்கள் நிரப்புதல்.

6. (1) 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (f) கூறின்படி நியமனம் செய்யப்படும் உறுப்பினர் எவரும், குழுவின் தலைவருக்கு எழுத்துருவில் மூன்று மாத கால அறிவிப்பினை வழங்கி மற்றும் அத்தகைய பதவி விலகல் அத்தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படுவதன் பேரில், அவர் பதவி விலகியதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) (1)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவரின் பதவியில் ஏற்படும் தற்காலிக காலியிடமானது இயன்ற விரைவில் நிரப்பப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய காலியிடத்திற்கு நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் அவரது பதவியில் முன்னிருந்தவரின் எஞ்சிய பதவிக் காலத்திற்கு பதவியில் இருப்பார்.

குறைபாடு முதலான வற்றினால் குழுவின் செயல் எதுவும் செல்லாததாக ஆக்கப்படுதலாகாது

7. குழுவினால் இந்தச் சட்டத்தின்படியோ அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளின் படியோ செய்யப்பட்ட செயல் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும்,

(a) குழுவில் உள்ள காலியிடம் அல்லது அமைப்பில் உள்ள குறைபாடு எதனின்; அல்லது

(b) அதன் நபரொருவரை உறுப்பினராக நியமித்ததில் குறைபாடு அல்லது முறைகேடு எதனின்; அல்லது

(c) நேர்வின் தகுதிகளை பாதிக்காமல் அத்தகைய செயல் அல்லது நடவடிக்கையிலுள்ள குறைபாடு அல்லது முறைகேடு எதனின் காரணத்தினால் மட்டுமே, செல்லாததாக ஆக்கப்படுதலாகாது.

நிதியத்தின் ஒப்படைப்பும் பயன்பாடும்.

8. நிதியமானது அரசிடம் உற்றமைந்திருத்தல் மற்றும் அதனால் வைத்து வரப்படுதல் வேண்டும். அரசானது, நிதியத்திலிருந்து அத்தகைய தொகைகளை ஆண்டொன்றிற்கு இருமுறை, வகுத்துரைக்கலாகும் முறையில் குழுவிற்கு விடுவித்தல் வேண்டும். குழுவானது, அத்தகைய தொகைகளை இச்சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு மற்றும் அதன் நோக்கங்களுக்காக பயன்படுத்துதல் வேண்டும்.

நிதியத்தினை நிருவகித்தல்.

9. (1) குழுவினால், அந்நிதியமானது நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிதியத்தின் நிர்வாகத்தில், குழுவானது, இந்தச் சட்ட வகைமுறைகளுக்கும் அதன் கீழ் செய்யப்படும் விதிகளுக்கும் உட்பட்டு,—

(a) நிதியத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான அல்லது மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான விண்ணப்பங்களை, மாவட்ட பதிவாளர் (நிருவாகம்) மூலம் பெற்றுக் கொண்டு, அவற்றைப் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் அத்தகைய விண்ணப்பங்களை முடிவு செய்தல் வேண்டும்;

(b) நிதியத்திலிருந்து பணம் வழங்கப்படுவதற்காக நேர்விற்கேற்ப, நிதிய உறுப்பினர்கள் அவர்களால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களுடைய சட்டப்படியான வாரிசுகளிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டு தான் தேவையென கருதுகின்ற விசாரணையை நடத்தி அவ்விண்ணப்பங்கள் பெறப்பட்ட தேதியிலிருந்து ஐந்து மாதங்களுக்குள் அவற்றை முடிவு செய்தல் வேண்டும்;

(c) விண்ணப்பங்களின் மீதான தமது முடிவுகளைக் குழுவின் நடவடிக்கைக் குறிப்பேட்டில் பதிவு செய்தல் வேண்டும்;

(d) குழுவானது, வகுத்துரைக்கலாகும் உரிய சரிபார்த்தலுக்குப் பிறகு, பின்வரும் பலன்களை வழங்குதல் மற்றும் அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களில், பின்வருவனவற்றிற்காக நிதியின் இருப்பிற்குட்பட்டு தொகையினை செலுத்துதல் வேண்டும்—

(i) நிதிய உறுப்பினரின் விபத்து கால மரண பலன் அல்லது நிரந்தர ஊனம் அல்லது பிற பகுதி ஊன பலன்;

(ii) நிதிய உறுப்பினரின் இயற்கை மரண பலன்;

(iii) உறுப்பினரின் திருமணம் அல்லது அவரது மகன் அல்லது மகளின் திருமணத்திற்கு திருமண உதவி;

(iv) நிதியத்தின் ஒரு பெண் உறுப்பினருக்கு மகப்பேறு பலன்;

(v) நிதியத்தின் உறுப்பினருக்கான மூக்குக் கண்ணாடி பலன்;

(vi) நிதியத்தின் உறுப்பினருடைய குழந்தைகளுக்கான கல்வி பலன்;

(vii) நிதியத்தின் முன்னாள் உறுப்பினர்க்கு ஓய்வூதிய பலன்; மற்றும்

(viii) நிதியத்தின் உறுப்பினர் ஒருவருக்கு அல்லது அவரது வாழ்க்கை துணைவருக்கு ஈமச்சடங்கு உதவி.

(e) வகுத்துரைப்படலாகும் அத்தகைய பருவ இதழ்கள் மற்றும் ஆண்டு அறிக்கைகளை குழுவானது அரசுக்கு அனுப்புதல் வேண்டும்;

(f) நிதியத்தில் இணைய அல்லது மீண்டும் இணைவதற்கான விண்ணப்பங்கள் அல்லது நிதிய நலனுக்காக உரிமைக் கோரிக்கைகள் தொடர்பாக குழுவின் முடிவுகளை, பதிவஞ்சலின் மூலம் அவ்விண்ணப்பதாரர்களுக்கு தெரிவித்தல் வேண்டும்; மற்றும்

(g) இந்தச் சட்டத்தின்படி மற்றும் அதன் கீழ் செய்யப்படும் விதிகளின்படி செய்ய தேவையானதாகிற அல்லது தேவைப்படக்கூடிய பிற செயல்களைச் செய்தல் வேண்டும்.

குழுவின் செயற்பணிகளின் ஒப்படைவு

10. குழுவானது, அரசின் முன் ஏற்பளிப்புடன், இச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளின் படி, அது தேவையென கருதலாகும் அத்தகைய அதன் செயற்பணிகளை, அது பொருத்தமென கருதலாகும் அத்தகைய தடைக்கட்டுகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, நிதியத்தின் பயனுறு மேலாண்மைக்காக, தலைவர் அல்லது செயலாளருக்கு ஒப்படைவு செய்யலாம்.

கணக்குகள் மற்றும் தணிக்கை

11. (1) குழுவானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கணக்குகள் மற்றும் புத்தகங்களை பேணி வருதல் வேண்டும்.

(2) குழுவின் கணக்குகள், குழுவினால் பணியமர்த்தப்பட்ட பட்டயக் கணக்கரொருவரால் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(3) பட்டையக் கணக்கரால் சான்றளிக்கப்பட்டவாறான கணக்குகள், அதன் மீதான தணிக்கை அறிக்கையுடனிணைந்து, அந்நிதியாண்டின் இறுதியிலிருந்து ஆறு மாத காலஅளவிற்குள் குழுவின் செயலாளரால் அரசுக்கு மேலனுப்பப்படுதல் வேண்டும்.

(4) அரசானது, தணிக்கையாளரின் அறிக்கையினை ஆய்வு செய்ததன் பேரில், அது வழங்க பொறுத்தமென கருதலாகும் அத்தகைய பணிப்புரைகளை குழுவானது நிறைவேற்றுதல் வேண்டும்.

செயலாளரின் அதிகாரங்களும் கடமைகளும்.

12. குழுவின் செயலாளரானவர்,—

(a) குழுவின் தலைமைச் செயல் அலுவலராக இருத்தல் மற்றும் அதன் முடிவுகளை நிறைவேற்றுவதற்குப் பொறுப்புடையவராயிருத்தல் வேண்டும்;

(b) குழுவிற்காகவும் எதிராகவும் உரிமை வழக்குகளிலும் அதன் நடவடிக்கைகளுக்காக அனைத்திலும் குழு சார்பாளராயிருத்தல் வேண்டும்;

(c) குழுவின் முடிவுகள் மற்றும் நெறிமுறைக் கட்டளை அனைத்திற்கும் தம் கையொப்பம் மூலமாக சான்றளிக்க வேண்டும்;

(d) குழுவின் வங்கிக் கணக்குகளைப் பொருளாருடன் சேர்ந்து கூட்டாக இயக்குதல் வேண்டும்;

(e) குழுவின் கூட்டங்களைக் கூட்டுவதோடு அதன் நடவடிக்கைக் குறிப்புகளைத் தயாரித்தலும் வேண்டும்;

(f) குழுவின் கூட்டங்களுக்குத் தேவையான எல்லாப் பதிவேடுகளுடனும் தகவலுடனும் வருகை தருதல் வேண்டும்;

(g) அவ்வப்போது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவங்கள், பதிவேடுகள் மற்றும் பிற பதிவுறுகள் ஆகியவற்றைப் பேணி வருதலோடு குழு தொடர்புடைய கடிதத் தொடர்பு அனைத்தையும் செய்து வருதலும் வேண்டும்;

(h) ஒவ்வொரு நிதியாண்டின் போதும், குழுவினால் நடத்தப்பட்ட அலுவல் பரிமாற்றங்களின் ஆண்டு விவர அறிக்கை ஒன்றைத் தயாரித்தல் வேண்டும்; மற்றும்

(i) குழுவினால் பணிக்கப்படக்கூடிய அத்தகைய பிற செயல்களைச் செய்தல் வேண்டும்.

குழுவின் கூட்டங்கள்.

13. (1) குழுவானது, அதனின் அலுவல் நடத்துவதற்கு குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது தேவையென்று கருதினால் அதற்கு அதிகமாக கூடுதல் வேண்டும்.

(2) குழுவின் ஐந்து உறுப்பினர்கள், குழுவின் கூட்டமொன்றுக்கான குறைவெண் வரம்பெல்லையாக அமைதல் வேண்டும்.

(3) தலைவர் அல்லது அவர் வருகை தாராதிருந்த நிலையில், கூட்டத்திற்கு வருகை தந்த உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் உறுப்பினர், குழுவின் கூட்டம் ஒன்றிற்குத் தலைமை வகித்தல் வேண்டும்.

(4) குழுவின் கூட்டமொன்றில் வருகின்ற பொருட்பாடு எதுவும், அக்கூட்டத்தில் வந்திருந்து மற்றும் வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையினரால் முடிவு செய்யப்படுதல் வேண்டும் மற்றும் வாக்குகள் சமமாக அமைகின்ற நேர்வில், தலைவர் அல்லது அக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்கின்றவர் அறுதிவாக்கொன்றினை அளித்தல் வேண்டும்.

குழு உறுப்பினர்களுக்கான பயணப்படியும் நாள் படியும்.

14. குழுவிற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பயணப்படியும் நாள் படியும் பெறுவதற்கு தகுதியுடைவர்களாக இருத்தல் வேண்டும்.

மறு ஆய்வு.

15. குழுவானது, எந்நேரத்திலும் தானாக முன்வந்து அல்லது உரித்தமுள்ள நபர் எவரிடமிருந்தும் பெறப்பட்ட விண்ணப்பத்தின் மீது, அதனால் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள், அத்தகைய ஆணை எதனையும் மறு ஆய்வு செய்யலாம்:

வரம்புரையாக, குழுவானது பாதிக்கப்பட்ட நபர் எவருக்கும் அவரது தரப்பினை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பொன்றை நல்கினாலன்றி, அத்தகைய நபரைப் தீங்கு விளைவிக்கும் வகையில் பாதிக்கின்ற ஆணை எதையும் பிறப்பித்தலாகாது.

மையச் சட்டம் V/1908.

சாட்சிகளை எடுப்பதற்கும் மற்றும் சான்றுகளை தருவிப்பதற்கும் அழைப்பாணை அனுப்ப அதிகாரம்.

**16.** குழுவானது, இந்தச் சட்டத்தின்படி விசாரணை எதனின் நோக்கங்களுக்காக, 1908 ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் படி உரிமை வழக்கொன்றை விசாரணை செய்கையில், உரிமையியல் நீதிமன்றமொன்றில் உற்றமைந்துள்ள அதே அதிகாரங்களைப் பின்வரும் பொருண்மைகளைப் பொறுத்துப் பெற்றிருத்தல் வேண்டும், அதாவது:—

(a) நபரெவரையும், முன்னிலையாவதை வலியுறுத்துதல் அல்லது ஆணையுறுதியின் பேரில் விசாரணை செய்தல்;

(b) ஆவணங்களை வெளிக்கொணர மற்றும் தாக்கல் செய்யக் கோருதல்;

(c) உறுதிமொழி ஆவணத்தின் பேரில் சான்று பெறுதல்; மற்றும்

(d) சாட்சிகளை விசாரணை செய்வதற்காக ஆணையம் அமைக்க ஆணை பிறப்பித்தல்.

ஆவண எழுத்தர் சங்கத்தின் ஏற்பிசைவும் பதிவும்.

**17.** (1) (a) குழுவினால் இதன்பொருட்டு அறிவிக்கை செய்யப்படுதல் வேண்டிய மாவட்டம் எதிலும் குறிப்பிட்ட தேதிக்கு முன்னர் செயல்பட்டு வரும் ஆவண எழுத்தர்களுக்கான சங்கங்கள் அனைத்தும் மற்றும்

(b) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்குப் பின்னர் அமைத்துருவாக்கப்பட்ட ஆவண எழுத்தர்களின் சங்கம் எதுவும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய படிவத்தில் இந்த சட்டத்தின்படி ஆவண எழுத்தர்களின் சங்கம் என ஏற்பிசைவளிக்க மற்றும் பதிவு செய்வதற்காக குழுவிற்கு விண்ணப்பிக்கலாம்.

(2) ஏற்பிசைவிற்கான மற்றும் பதிவிற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் சங்கத்தின் விதிகள் அல்லது துணை விதிகள், சங்கத்தில் பதவி வகிப்பவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் மற்றும் உறுப்பினர்களின் பெயர், முகவரி, வயது அத்தகைய உறுப்பினரின் வழக்கமாகத் பணிபுரியும் இடம் ஆகியவற்றைக் கொண்டுள்ள நாளது தேதி வரையிலான பட்டியல் ஆகியவற்றுடன் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) குழுவானது, அவசியமென கருதுகின்ற அத்தகைய விசாரணையைச் செய்த பின்பு, அத்தகைய ஆவண எழுத்தர் சங்கத்திற்கு ஏற்பிசைவு அளிக்கலாம் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் ஏற்பிசைவு மற்றும் பதிவுச் சான்றிதழ் ஒன்றினை வழங்கலாம்.

(4) சங்கத்தின் ஏற்பிசைவு மற்றும் பதிவு தொடர்பான குழுவின் முடிவே இறுதியானதாக இருக்க வேண்டும்.

ஆவண எழுத்தர்கள் சங்கத்தின் கடமைகள்.

**18.** (1) ஆவண எழுத்தர்களின் சங்கம் ஒவ்வொன்றும், ஒவ்வொரு ஆண்டிலும், ஏப்ரல் 15 ஆம் நாளன்றோ அல்லது முன்போ அந்த ஆண்டின் மார்ச் 31 ஆம் நாளன்று உள்ளவாறு அதன் உறுப்பினர்களின் பட்டியல் ஒன்றை குழுவிற்கு தெரிவித்தல் வேண்டும்.

(2) ஆவண எழுத்தர் சங்கம் ஒவ்வொன்றும் பின்வருவனவற்றை குழுவிற்கு தெரிவித்தல் வேண்டும்—

(a) ஆவண எழுத்தர் சங்கத்தின் பதவி வகிப்பவர்களில் ஏற்பட்ட மாற்றம் எதையும் அத்தகைய மாற்றத்திலிருந்து பதினைந்து நாட்களுக்குள்;

(b) சேர்த்தல் மற்றும் மீண்டும் சேர்த்தல் உள்ளடங்கலாக உறுப்பினர்களின் எண்ணிக்கையின் மாற்றம் எதனையும் பற்றி அத்தகைய மாற்றத்திலிருந்து முப்பது நாட்களுக்குள்;

(c) அதன் உறுப்பினர் எவரொருவரின் இறப்பு அல்லது ஓய்வு குறித்து அவை நிகழ்ந்த தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்; மற்றும்

(d) அவ்வப்போது, குழுவினால் கோரப்படக்கூடிய அத்தகைய பிற பொருண்மைகள்.

நிதியத்தில் உறுப்பினர் தகுதி.

**19.** (1) ஆவண எழுத்தர் ஒவ்வொருவரும் நிதியத்தில் உறுப்பினரொருவராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும் குழுவிற்கு விண்ணப்பிக்கலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பமொன்று வரப்பெற்றதன் பேரில், குழுவானது, அது பொருத்தமெனக் கருதுகின்ற விசாரணையைச் செய்தல் வேண்டும் மற்றும் அவ்விண்ணப்பதாரரை நிதியத்தில் சேர்த்துக் கொள்ளலாம் அல்லது எழுத்துருவில் காரணங்களை பதிவு செய்து அவ்விண்ணப்பத்தை மறுக்கலாம்:

வரம்புரையாக, விண்ணப்பமொன்றை மறுக்கும் ஆணை எதுவும், விண்ணப்பதாரருக்கு அவரது தரப்பை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பொன்றினை நல்கினாலன்றி பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(3) விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும், சேர்ப்பு மற்றும் மறு சேர்ப்பின் போது நிதியத்திற்கு ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) விண்ணப்பக் கட்டணமொன்றைச் செலுத்த வேண்டும்.

(4) நிதிய உறுப்பினர் ஒவ்வொருவரும், சேர்க்கையின் போது, தாம் இறக்கும் நேர்வில் நிதியத்திலிருந்து வழங்கப்படத்தக்க தொகை எதையும் பெற்றுக் கொள்வதற்கான உரிமையை சார்ந்து வாழ்பவர்களில் ஒருவருக்கோ அல்லது ஒருவருக்கு மேற்பட்டவருக்கு அளிப்பதாயின் அவர்களுக்கு அளிக்க வேண்டிய பங்குத் தொகை குறித்தோ நியமனம் அளித்தல் வேண்டும்.

(5) நிதியத்தின் உறுப்பினரொருவர், எந்த நேரத்திலும், குழுவிற்கு புதிய நியமனத்துடன் எழுத்துப்பூர்வமான அறிவிப்பினை அனுப்புவதன் மூலம் ஒரு நியமனத்தை ரத்து செய்யலாம்.

(6) குழுவானது, ஆவண எழுத்தர் தவறாகக் கூறியோ, மோசடியாகவோ அல்லது தகாதச் செல்வாக்கினாலோ நிதியத்தின் உறுப்பினர் பதவியைப் பெற்றுள்ளார் என்ற முறையீட்டின் பேரிலோ அல்லது மற்றபடியோ, நம்புவதற்கான தகவல் காரணமியிருக்குமிடத்து, அந்நிதியத்தின் உறுப்பினர் பதவியிலிருந்து அத்தகைய ஆவண எழுத்தர் பெயரை நீக்குவதற்குக் குழு தகுதியுடையதாகும்:

வரம்புரையாக, இந்த உட்பிரிவின்படி ஆணை எதுவும் அதனால் தீங்கு விளைவிக்கும் வகையில் பாதிக்கப்படக்கூடிய நபருக்கு தனது முறையீட்டை வழங்குவதற்கான வாய்ப்பொன்றினைக் நல்கினாலன்றி, பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(7) நிதியத்தின் உறுப்பினர் தன்னுடைய விருப்பத்தின் பேரில் நிதியத்தின் உறுப்பினர் தகுதியை திரும்பப் பெறலாம்.

20. நிதிய உறுப்பினரொருவர்,–

தகுதியின் இடை நிறுத்தம்.

(i) அவருடைய உறுப்பினர் தகுதியை தன் விருப்பத்தின் பேரில் திரும்பப் பெறுதலினால்;

(ii) 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர்களின் உரிமம் விதிகளின் படி அவரது உரிமத்தை ஒப்புவிப்பு அல்லது ரத்து செய்தலினால்; அல்லது

(iii) குழுவினால் அவரது உறுப்பினர் தகுதியை நீக்கம் செய்தலினால் நிதியத்தின் உறுப்பினர் பதவியிலிருந்து நிறுத்தப்பட வேண்டும்.

21. (1) உறுப்பினர் தகுதி நிறுத்தத்தின் பேரில், நிதியத்திலிருந்து ஓய்வூதியம் அளிப்பதற்கான விண்ணப்பமானது வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய படிவத்தில் குழுவிற்கு வழங்கப்படுதல் வேண்டும்.

உறுப்பினர் தகுதி இடை நிறுத்தத்தின் போது ஓய்வூதியம் கொடுத்தல்.

(2) (1) ஆம் உட்பிரிவின்படி பெறப்பட்ட விண்ணப்பமானது அது தேவையெனக் கருதும் அத்தகைய விசாரணையின் பின்னர், குழுவால் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

(3) பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாத காலத்திற்கு நிதியத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது பத்தாண்டுகளுக்கு குறையாத காலம் உறுப்பினராக இருந்து மற்றும் அறுபது ஆண்டு வயது நிறைவடைந்துள்ள நபரெவரும், 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர்களின் உரிமம் விதிகளின்படி வழங்கப்பட்ட உரிமத்தினை ஒப்புவிப்பதன் பேரில் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில் நிதியத்திலிருந்து ஓய்வூதியத்தைப் பெற உரிமையுடையராவர்:

வரம்புரையாக, நிரந்தர ஊனத்தின் காரணமாக எந்த நேரத்திலும் நிதியத்தின் உறுப்பினர் பதவியிலிருந்து நிறுத்தப்பட்ட நபர் ஒருவர் ஓய்வூதியம் பெற உரிமையுடையவராவார்.

(4) 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர்களின் உரிமம் விதிகளின் படி உரிமம் ரத்து செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் அல்லது குழுவினால் உறுப்பினர் தகுதியிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் நிதியத்திலிருந்து ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமையுடையவராகார்.

22. (1) நிதியத்தின் உறுப்பினர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர் அல்லது சட்டப்படியான வாரிசுகள் நிதியத்திலிருந்து தொகை எதையும் பெறுவதற்குள்ள உரித்தம் அல்லது உரிமையானது ஒப்படைப்பு, உடைமை மாற்றம் அல்லது பிணயமாக வைத்தல் ஆகாது மற்றும் நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது பிற அதிகார அமைப்பின் தீர்ப்பாணை அல்லது ஆணை எவற்றின் கீழும் அவற்றை பற்றுகை வைக்கப்படுவதற்கு பொறுப்பாகுதல் கூடாது.

நிதியத்தில் உறுப்பினர் நலனின் உடைமை மாற்றம், பற்றுகை போன்ற–வற்றிக்கான கட்டுப்பாடு.

(2) எந்தவொரு கடனளிப்பவரும், நிதிய உறுப்பினர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர் அல்லது சட்டப்படியான வாரிசுகளின் நிதியம் அல்லது அதன் நலனுக்கெதிராக வழக்கு தொடர உரிமையுடையவராகுதல் கூடாது.

விளக்கம்.– இந்த பிரிவின் நோக்கத்திற்காக, “கடனளிப்பவர்” என்பது அரசு அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள நொடிப்பு நிலை தொடர்பான சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட அலுவல் முறை சொத்துரிமை மாற்றம் பெற்றவர் அல்லது சொத்து பேணுநர் ஆகியோரை உள்ளடக்கும்.

இணைப்புப் பட்டியலைத் திருத்துவ தற்கான அதிகாரம்.

23. அரசானது, அறிவிக்கை வாயிலாகக் குழுவின் பரிந்துரையின் பேரில், இணைப்புப் பட்டியலைத் திருத்தம் செய்யலாம்.

நல்லெண்ணத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைக்குப் பாதுகாப்பு

24. (1) இந்த சட்டத்தின்படி அல்லது அதன் கீழ் செய்யப்படும் விதி எதனையும் நல்லெண்ணத்தில் செய்த அல்லது செய்யக் கருதிய செயல் எதற்காகவும் அல்லது எவருக்கெதிராகவும் உரிமை வழக்கு.

(2) இந்தச் சட்டத்தை அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதி எதனையுமொட்டி நல்லெண்ணத்தில் செய்த அல்லது செய்யக் கருதிய செயல் எதனாலேனும் விளைவிக்கப்பட்ட அல்லது விளைவிக்கப்படக்கூடிய சேதம் எதற்காகவும், குழு அல்லது அரசுக்கெதிராக உரிமை வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

25. இந்த சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்துவதில் இடர்பாடு ஏதேனும் எழுமானால், தருவாயானது கோருகின்றவாறு ***தமிழ்நாடு அரசிதழில்*** ஆணை மூலமாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அந்த இடர்ப்பாட்டை நீக்கும் நோக்கத்திற்குத் தேவையானதென அல்லது உகந்ததெனத் தோன்றும் எதையும் செய்யலாம் என அரசு ஆணை ஒன்றின் வாயிலாக வெளியிடலாம்:

வரம்புரையாக, ஆனால் அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டாண்டு கால அளவு முடிவடைந்த பின்னர் செய்யப்படுதலாகாது.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

26. (1) அரசானது அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின் படி செய்யப்பட்ட விதி அல்லது அறிவிக்கை அல்லது அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர் கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன் அல்லது அடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு சட்டமன்றப் பேரவை அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை ஏதொன்றிலும் மாற்றம் எதையும் செய்யுமானால் அல்லது சட்டமன்றப் பேரவை அல்லது அந்த விதியோ அல்லது அறிவிக்கையோ அல்லது ஆணையோ செய்யப்படவோ அல்லது பிறப்பிக்கப்படவோ கூடாது என்று சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமானால் அதற்குப் பின் அந்த விதியோ அல்லது அறிவிக்கையோ அல்லது ஆணையோ அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவில்தான் நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப அது செல்திறன் அற்றதாதல் வேண்டும். எனினும் அத்தகைய மாற்றமோ அல்லது செல்திறன் அற்றுப்போவதோ அந்த விதியின்படியோ அல்லது அறிவிக்கையின்படியோ அல்லது ஆணையின்படியோ முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் பாதகம் இல்லாமல் இருத்தல் வேண்டும்.

**இணைப்புப் பட்டியல்**

[ 9 (2), 23 ம் பிரிவுகளைக் காண்க.]

| *வரிசை எண்* | *பலன்கள்* | | *தொகை (ரூபாய்)* |
|---|---|---|---|
| 1. | a) விபத்துக்கால மரண பலன் | | 1,00,000 |
| | b) நிரந்தர ஊன பலன் | | |
| | c) பகுதி ஊன பலன் | | 20,000 |
| 2. | இயற்கை மரண பலன் | | 20,000 |
| 3. | திருமண உதவி— | | |
| | (a) ஆண்:— | | 8,000 |
| | (b) பெண்:— | | 10,000 |
| 4. | மகப்பேறு பலன் | | 6,000 |
| 5. | மூக்குக்கண்ணாடி பலன் | | 1,500 |
| 6. | கல்வி பலன்— | | |
| | (a) இடைநிலைக் கல்வி நிறைவுச் சான்றிதழ் படிப்பிற்கான உதவித்தொகை. | | 1,000 |
| | (b) இடைநிலைக் கல்வி நிறைவுச் சான்றிதழ் தேர்ச்சிக்காக | | 1,000 |
| | (c) மேனிலைப் பள்ளி சான்றிதழ் படிப்பிற்கான உதவித்தொகை | | 1,500 (ஆண்டிற்கு) |
| | (d) மேனிலைப் பள்ளி நிறைவு சான்றிதழ் தேர்ச்சிக்காக. | | 1,500 |
| | | விடுதியில் தங்காதோர் (ஆண்டிற்கு) | விடுதியில் தங்கிப் படிப்பவர் (ஆண்டிற்கு) |
| | (e) தொழிற்பயிற்சி மாணவர் | 2,000 | 2,500 |
| | (f) பட்டயம் | 2,000 | 2,500 |
| | (g) பட்டப்படிப்பு | 3,000 | 3,500 |
| | (h) முதுகலைப் பட்டம் அல்லது தொழிற்கல்விப் பட்டம் பெற்ற மாணவர்கள் | | 10,000 (ஆண்டிற்கு) |
| 7. | ஓய்வூதியப் பலன் | | 1,500 (மாதத்திற்கு) |
| 8. | ஈமச்சடங்கு உதவி | | 5,000 |

## நோக்கக் காரண விளக்கவுரை

2021–2022 ஆம் ஆண்டிற்கான வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அவர்களால் சட்டமன்றப் பேரவையில் செய்யப்பட்ட அறிவிப்பிற்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு, 28.10.2010 ஆம் தேதியிட்ட வணிகவரி மற்றும் பதிவுத் (எம்.2) துறையின் அரசாணை (நிலை) எண்.183–ல் வெளியிடப்பட்ட முந்தைய ஆணைகளுக்கு மாற்றாணையாக, 24.12.2021 ஆம் தேதியிட்ட வணிகவரி மற்றும் பதிவுத் (எம்.2) துறையின், அரசாணை (நிலை) எண்.178–ல் ஆவண எழுத்தர்களின் நலனுக்காக, நிரந்தர ஊனம் அல்லது பகுதி ஊனம், விபத்துக்கால மரணம் அல்லது இயற்கை மரணம், திருமணம், மகப்பேறு, மேலும் அவர்களைச் சார்ந்திருப்பவர்களின் திருமணம் மற்றும் கல்விக்காக, ஓய்வூதிய பலன் மற்றும் நிதி உதவி வழங்குவதற்கு, நலநிதியமொன்றை அமைத்துருவாக்கம் செய்வதற்காக ஆணை வெளியிடப்பட்டது. தற்போது, மேற்சொன்ன நோக்கத்திற்காக, சட்டமியற்றுவதென அரசு தீர்மானித்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவானது மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைகிறது.

**பி. மூர்த்தி,**
*வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்ட முன்வடிவின் 1 (2), 3 (1), 3 (2)(b), 4 (1) மற்றும் (3), 8, 9 (2), 11 (1), 12, 14, 17(1) மற்றும் (3), 19 (1), 21 (1), 23, 25, 26 ஆகிய கூறுகளானவை அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, அறிவிக்கைகளைப் பிறப்பிப்பதற்கு அல்லது ஆணைகள் அல்லது விதிகளைச் செய்வதற்கு அல்லது நேர்விற்கேற்ப ஆணைகளைப் பிறப்பிப்பதற்கு அரசு அதிகாரமளிக்கின்றது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**பி. மூர்த்தி,**
*வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 மார்ச் 24.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

**2022 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 20/2022**

***2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு.

**1.** இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல (திருத்தச்) சட்டம் என வழங்கப்படும் .

தமிழ்நாடு சட்டம் 4/2011.

2 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**2.** (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான), 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில்,–

(1) (b) கூறுக்காக பின்வரும் கூறுகளானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(aa) "தலைவர்" என்பது வாரியத்தின் தலைவர் என்று பொருள்படும் ;

(b) "நிறுமம்" என்பது 2013 ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் (மையச்சட்டம் 18/2013) 2 ஆம் பிரிவின் (20) ஆம் கூறில் வரையறுக்கப்பட்டவாறான ஒரு நிறுமம் என்று பொருள்படும்;";

(2) (e) கூறில் "5 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையின் படி" எனும் சொற்றொடருக்காக, " 5 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் படி" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) ( g ) மற்றும் (k) கூறுகளானவை விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(4) (l) கூறுக்கு பின்பு, பின்வரும் கூறுகளானவை உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(la) "வாரியத்தின் உறுப்பினர்" என்பது வாரியத்தின் தலைவரை உள்ளடக்கும்;"

(lb) "உறுப்பினர் – செயலாளர்" என்பது வாரியத்தின் உறுப்பினர் செயலாளர் என்று பொருள்படும்;".

5ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில் "அவர்களுள் ஒருவர் மேலாண்மை இயக்குநராக" எனும் சொற்றொடருக்காக, "அவர்களுள் ஒருவர் உறுப்பினர் செயலாளராக" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

10 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவில்,—

(1) (3), (4) மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளுக்காக பின் வரும் உட்பிரிவுகளானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(3) வாரியமானது, இதில் இதன்பின்பு வகை செய்யப்பட்டவாறு, அரசால் அவ்வப்போது பெயர் குறித்து நியமிக்கப்படும் பதினைந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

(a) தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் தமிழர்களின் நலனில் ஈடுபாடுடைய சிறந்த நபர் ஒருவர், தலைவராக;

(b) தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (வெளிநாட்டில் வாழும்) தமிழர்களைச் சார்பாற்றம் செய்கிற ஐந்து உறுப்பினர்கள்;

(c) தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாமல் (இந்தியாவில் வாழும்) தமிழர்களைச் சார்பாற்றம் செய்கிற இரண்டு உறுப்பினர்கள்;

(d) அரசைச் சார்பாற்றம் செய்கிற ஐந்து உறுப்பினர்கள்;

(e) அயல்நாட்டுப் பணிகளுக்கு ஆட்சேர்ப்பு வரம்பிடப்பட்ட நிறுவனத்தை அல்லது 1983 ஆம் ஆண்டு குடியேற்றச் சட்டத்தின் கீழ் (மையச்சட்டம் 31/1983) பதிவுசெய்யப்பட்ட ஆட்சேர்ப்பு முகமை எதையும் சார்பாற்றம் செய்கிற உறுப்பினர் ஒருவர்;

(f) தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் மறுவாழ்வு மற்றும் நல ஆணையரகத்தைச் சார்பாற்றம் செய்கிற உறுப்பினர் ஒருவர்.

(4) தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் மறுவாழ்வு மற்றும் நல ஆணையர், வாரியத்தின் பதவி வழி உறுப்பினர் — செயலாளராக இருத்தல் வேண்டும்.

(5) வாரியத்தின் அனைத்து உறுப்பினர்களையும் பெயர்குறித்து நியமனம் செய்தபின்பு, அரசானது, அவர்தம் பெயர்களை அறிவிக்கையின் வாயிலாக வெளியிடுதல் வேண்டும்.".

(2) (7) ஆம் உட்பிரிவில், "வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் அல்லது இயக்குநர் எவரிடமும்" எனும் சொற்றொடருக்காக, "வாரியத்தின் தலைவர் அல்லது உறுப்பினர் — செயலாளர் அல்லது உறுப்பினர் எவரிடமும்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

11 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவில்,—

(1) ஓரத் தலைப்புக்காக, பின்வரும் ஓரத்தலைப்பானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:—

"வாரிய உறுப்பினர்களின் பதவிக் காலம்";

(2) (1) ஆம் உட்பிரிவில், "பதவி வழி இயக்குநர்கள் அல்லாத பிற இயக்குநர்கள்" எனும் சொற்றொடருக்காக, "வாரியத்தின் உறுப்பினர்கள்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (2) ஆம் உட்பிரிவில், "பதவி வழி இயக்குநர் அல்லாத பிற இயக்குநர் எவரையும்" எனும் சொற்றொடருக்காக, "உறுப்பினர் எவரையும்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

6. முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவில்,— 13 ஆம் பிரிவிற்கான திருத்தம்

(1) (1) ஆம் உட்பிரிவில் ''இயக்குநர்'' எனும் சொற்றொடருக்காக, ''உறுப்பினர்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2) உட்பிரிவில் ''இயக்குநர்'' எனும் சொற்றொடருக்காக, ''வாரியத்தின் உறுப்பினர்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (3) மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளுக்காக, பின்வரும் உட்பிரிவுகளானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(3) (2) ஆம் உட்பிரிவின் (a) கூறின்படி நீக்கப்பட்ட வாரியத்தின் உறுப்பினர் ஒருவர், அரசால் பிறவாறு ஆணையிடப்பட்டாலன்றி, அவ்வாறு அவர் நீக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் காலஅளவுக்கு வாரியத்தின் உறுப்பினராக மீண்டும் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்குத் தகுதிக் கேடுடையவராதல் வேண்டும்.

(4) (2) ஆம் உட்பிரிவின் (b) கூறின்படி நீக்கப்பட்ட வாரியத்தின் உறுப்பினர் ஒருவர், அவர் இனியும் தகுதியற்றவரல்லர் என அரசின் ஆணையொன்றின் வாயிலாக விளம்பப்படும் வரையில் மீண்டும் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆகார்.''.

7. முதன்மைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவில்,— 14 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) ஓரத் தலைப்புக்காக, பின்வரும் ஓரத்தலைப்பானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''வாரியத்தின் உறுப்பினர்கள் பதவி விலகல்'';

(ii) பதவி வழி இயக்குநர் அல்லாத பிற இயக்குநர் எவரும்,'' எனும் சொற்றொடருக்காக, ''உறுப்பினர் எவரும்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் .

8. முதன்மைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவில், அதன் வரம்புரை உள்ளடங்கலாக, ''இயக்குநர்'' மற்றும் ''இயக்குநர்கள்'' எனும் சொற்றொடர்களுக்காக, முறையே ''வாரியத்தின் உறுப்பினர் '' மற்றும் ''வாரியத்தின் உறுப்பினர்கள்'' எனும் சொற்றொடர்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 15 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

9. முதன்மைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவில், ''1956 ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டம் (மையச்சட்டம் 1/1956)'' எனும் சொற்றொடருக்காக, ''2013 ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டம் (மையச்சட்டம் 18/2013)'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 18 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

10. முதன்மைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், ''மேலாண்மை இயக்குநர்'' எனும் சொற்றொடருக்காக, ''உறுப்பினர் செயலாளர்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 20 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

11. முதன்மைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவில்,— 21 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) ஓரத் தலைப்பில், ''வாரியத்தின் இயக்குநர்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''வாரியத்தின் உறுப்பினர்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் ;

(ii) ''மேலாண்மை இயக்குநர் உள்ளடங்கலாக வாரிய இயக்குநர் ஒவ்வொருவரும்'' எனும் சொற்றொடருக்காக, ''உறுப்பினர்—செயலாளர் உள்ளடங்கலாக வாரிய உறுப்பினர் ஒவ்வொருவரும்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

22 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

12. முதன்மைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவில்,—

(1) (2) ஆம் உட்பிரிவில், ''முதல் வகுப்பு நீதித்துறை குற்றவியல் நடுவரின் நீதிமன்றத்தில்" எனும் சொற்றொடருக்காக, ''நீதித்துறை குற்றவியல் நடுவரின் நீதிமன்றத்தில்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (3) ஆம் உட்பிரிவில், ''மேலாண்மை இயக்குநர்'' எனும் சொற்றொடருக்காக, ''வாரியத்தின் தலைவர்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

24 ஆம் பிரிவிற்கான திருத்தம்

13. முதன்மைச்சட்டத்தின் 24 ஆம் பிரிவில், ''மேலாண்மை இயக்குநர்'' எனும் சொற்றொடருக்காக, "தலைவர் அல்லது உறுப்பினர்–செயலாளர்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

26 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

14. முதன்மைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவில்,—

(1) (1) ஆம் உட்பிரிவில், ''22 ஆம் பிரிவு'' எனும் சொற்றொடருக்காக, ''25 ஆம் பிரிவு'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (3) ஆம் உட்பிரிவில், (*a*) கூறில், ''வாரியத்தின் இயக்குநர்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''வாரியத்தின் உறுப்பினர்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

28 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

15. முதன்மைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவில், ''மேலாண்மை இயக்குநர்'' எனும் சொற்றொடருக்காக, ''தலைவர் அல்லது உறுப்பினர்–செயலாளர்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்

16. முதன்மைச் சட்டத்தின் இணைப்புப் பட்டியலில், (4) ஆம் இனத்தில், "மேலாண்மை இயக்குநர் மற்றும் இயக்குநர்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''வாரியத்தின் தலைவர், உறுப்பினர்–செயலாளர் மற்றும் உறுப்பினர்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்களின் நலனை உறுதி செய்ய மற்றும் ஓய்வூதியம் மற்றும் பிற பலன்களை வழங்குவதற்கான நிவாரணத்தை அளிப்பதற்காக, நல நிதியம் ஒன்றை அமைத்துருவாக்குவதற்காக மற்றும் தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்களின் நலனுக்காக, நிறுமங்கள் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது சங்கங்கள் அல்லது பிற நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கு, 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 4/2011) வகைசெய்கிறது. தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்கள் நல வாரியத்தின் அமைப்பினை "மேலாண்மை இயக்குநர் மற்றும் இயக்குநர்கள் என்பதற்கு பதிலாக, "தலைவர் மற்றும் உறுப்பினர்கள்" என மாற்றம் செய்யவும், மேலும், வாரியத்தின் எண்ணிக்கையை பதின்மூன்றிலிருந்து பதினைந்தாக உயர்த்தவும், அரசானது முன்மொழிந்துள்ளது. அது தமிழ்நாட்டை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்கள் மறுவாழ்வு மற்றும் நலன், ஆணையரை பதவிவழி உறுப்பினர் செயலாளராக செய்ய மேலும் முன்மொழிந்துள்ளது.

2. எனவே, அரசானது கூறப்பட்ட நோக்கத்திற்காக, 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டத்தினை (தமிழ்நாடு 4/2011) தக்கவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**செஞ்சி கே.எஸ். மஸ்தான்,**
*சிறுபான்மையினர் நலன் மற்றும்*
*வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை.*

**நிதி பற்றிய குறிப்பு**

இந்தச் சட்டமுன்வடிவானது சட்டமாக இயற்றப்படும்போது மாநிலத் தொகு நிதியத்திலிருந்து செலவு செய்ய நேரிடும். எனினும், இந்த நிலையில், முன்மொழியப்பட்ட சட்டத்தின் விளைவாக, ஏற்படக்கூடிய செலவினத்தின் துல்லியத்தினை எந்த அளவிலும் மதிப்பிட இயலாது.

**செஞ்சி கே.எஸ். மஸ்தான்,**
*சிறுபான்மையினர் நலன் மற்றும்*
*வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை.*

தலைமைச் செயலகம்,
*சென்னை,*
2022 மார்ச் 24.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

2022 ஆம் ஆண்டு **மார்ச்** திங்கள் 24—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 21/2022**

***2021-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத் தொகுநிதியத்திலிருந்து மேலும் குறிப்பிட்ட சில தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் எழுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. இந்தச் சட்டம், 2022—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு.

2. மாநில அரசு, 2021—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1—ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் தேவைப்படுகிற பத்தாயிரத்து எழுநூற்று முப்பத்து ஒன்று கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து இருபத்தொன்றாயிரம் ரூபாய்க்கு மேற்படாத மேலுமானதொரு தொகையை— 2021—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1—ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் மாநிலத் தொகுநிதியத்திலிருந்து துணை நிதி ஒதுக்கம் செய்தல்.

(a) இணைப்புப் பட்டியலின் (3)—ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காகத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட துணை மானியங்களையும்;

(b) இணைப்புப் பட்டியலின் (4)—ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காக மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்ட துணைச் செலவினத்தையும்;

எதிர்கொள்வதற்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்யலாம்.

**இணைப்புப் பட்டியல்.**
(2–ஆம் பிரிவைக் காண்க).

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 001 | மாநில சட்டமன்றம் | **வருவாய்** | 8,80,62,000 | ... | 8,80,62,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 002 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | **வருவாய்** | ... | *13,43,000* | 13,43,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 003 | நீதி நிருவாகம் | **வருவாய்** | 67,12,19,000 | *37,01,49,000* | 104,13,68,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 004 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | **வருவாய்** | 19,000 | *1,24,000* | 1,43,000 |
| | | **மூலதனம்** | 1,000 | ... | 1,000 |
| | | **கடன்** | 14,00,000 | ... | 14,00,000 |
| 005 | வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை | **வருவாய்** | 88,000 | *14,09,000* | 14,97,000 |
| | | **மூலதனம்** | 8,000 | ... | 8,000 |
| | | **கடன்** | 70,000 | ... | 70,000 |
| 006 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) | **வருவாய்** | 96,51,75,000 | ... | 96,51,75,000 |
| | | **மூலதனம்** | 1,000 | ... | 1,000 |
| | | **கடன்** | 1,00,00,000 | ... | 1,00,00,000 |
| 007 | மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) | **வருவாய்** | 57,96,27,000 | ... | 57,96,27,000 |
| | | **மூலதனம்** | 3,000 | ... | 3,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 008 | பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) | **வருவாய்** | 5,000 | ... | 5,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 009 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | **வருவாய்** | 23,000 | *36,13,000* | 36,36,000 |
| | | **மூலதனம்** | 3,000 | ... | 3,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 010 | வணிகவரிகள் (வணிகவரி மற்றும் பதிவுத் துறை) | **வருவாய்** | 6,72,66,000 | ... | 6,72,66,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 011 | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிகவரி மற்றும் பதிவுத் துறை) | **வருவாய்** | 105,47,55,000 | ... | 105,47,55,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 012 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | **வருவாய்** | 1,216,92,18,000 | ... | 1,216,92,18,000 |
| | | **மூலதனம்** | 11,68,35,000 | ... | 11,68,35,000 |
| | | **கடன்** | 2,95,70,000 | ... | 2,95,70,000 |
| 013 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | **வருவாய்** | 21,000 | ... | 21,000 |
| | | **மூலதனம்** | 1,000 | ... | 1,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 014 | எரிசக்தித் துறை | **வருவாய்** | 4,000 | ... | 4,000 |
| | | **மூலதனம்** | 376,07,63,000 | ... | 376,07,63,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 015 | சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) | **வருவாய்** | 1,98,46,000 | ... | 1,98,46,000 |
| | | **மூலதனம்** | 4,35,00,000 | ... | 4,35,00,000 |
| | | **கடன்** | 3,20,49,000 | ... | 3,20,49,000 |
| 016 | நிதித் துறை | **வருவாய்** | 304,16,26,000 | ... | 304,16,26,000 |
| | | **மூலதனம்** | 1,000 | ... | 1,000 |
| | | **கடன்** | 2,41,49,000 | ... | 2,41,49,000 |
| 017 | கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | **வருவாய்** | 79,43,11,000 | ... | 79,43,11,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | 6,45,27,000 | ... | 6,45,27,000 |
| 018 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | **வருவாய்** | 10,000 | ... | 10,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 019 | மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை | **வருவாய்** | 1,033,88,11,000 | *22,65,000* | 1,034,10,76,000 |
| | | **மூலதனம்** | 5,000 | *3,98,76,000* | 3,98,81,000 |
| | | **கடன்** | 10,00,000 | ... | 10,00,000 |
| 020 | உயர்கல்வித் துறை | **வருவாய்** | 19,000 | ... | 19,000 |
| | | **மூலதனம்** | 2,000 | ... | 2,000 |
| | | **கடன்** | 18,47,000 | ... | 18,47,000 |
| 021 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | **வருவாய்** | 32,10,19,000 | *1,50,000* | 32,11,69,000 |
| | | **மூலதனம்** | 21,000 | *5,25,22,000* | 5,25,43,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 022 | காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 1,05,000 | ... | 1,05,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | 13,51,70,000 | ... | 13,51,70,000 |
| 023 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 2,68,32,000 | *3,02,000* | 2,71,34,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 024 | சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 2,96,80,000 | *4,00,000* | 3,00,80,000 |
| | | **மூலதனம்** | 5,53,07,000 | ... | 5,53,07,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 025 | இயக்கவூர்திகள் குறித்த சட்டங்கள் – நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 17,02,71,000 | *5,59,000* | 17,08,30,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 026 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | **வருவாய்** | 13,000 | ... | 13,000 |
| | | **மூலதனம்** | 187,18,23,000 | ... | 187,18,23,000 |
| | | **கடன்** | 1,000 | ... | 1,000 |
| 027 | தொழில் துறை | **வருவாய்** | 8,000 | ... | 8,000 |
| | | **மூலதனம்** | 39,00,000 | ... | 39,00,000 |
| | | **கடன்** | 249,01,78,000 | ... | 249,01,78,000 |
| 028 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | **வருவாய்** | 17,000 | ... | 17,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 029 | சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | **வருவாய்** | 11,19,89,000 | ... | 11,19,89,000 |
| | | **மூலதனம்** | 2,59,85,000 | ... | 2,59,85,000 |
| | | **கடன்** | 1,04,03,000 | ... | 1,04,03,000 |
| 030 | எழுதுபொருள் மற்றும் அச்சு – (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | **வருவாய்** | 11,000 | ... | 11,000 |
| | | **மூலதனம்** | 3,91,10,000 | ... | 3,91,10,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 031 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | **வருவாய்** | 21,55,00,000 | ... | 21,55,00,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | 35,05,000 | ... | 35,05,000 |
| 032 | தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை | **வருவாய்** | 41,000 | ... | 41,000 |
| | | **மூலதனம்** | 3,000 | ... | 3,000 |
| | | **கடன்** | 19,98,000 | ... | 19,98,000 |
| 033 | சட்டத் துறை | **வருவாய்** | ... | ... | ... |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | 9,90,000 | ... | 9,90,000 |
| 034 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | **வருவாய்** | 956,91,68,000 | ... | 956,91,68,000 |
| | | **மூலதனம்** | 574,88,95,000 | ... | 574,88,95,000 |
| | | **கடன்** | 27,63,68,000 | ... | 27,63,68,000 |
| 035 | மனிதவள மேலாண்மைத் துறை | **வருவாய்** | 20,29,84,000 | *2,000* | 20,29,86,000 |
| | | **மூலதனம்** | 5,72,11,000 | ... | 5,72,11,000 |
| | | **கடன்** | 1,41,50,000 | ... | 1,41,50,000 |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 036 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | **வருவாய்** | 7,000 | ... | 7,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 037 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | **வருவாய்** | 31,25,04,000 | ... | 31,25,04,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 038 | பொதுத் துறை | **வருவாய்** | 97,71,55,000 | ... | 97,71,55,000 |
| | | **மூலதனம்** | 12,99,99,000 | ... | 12,99,99,000 |
| | | **கடன்** | 7,68,84,000 | ... | 7,68,84,000 |
| 039 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | **வருவாய்** | 23,30,51,000 | *3,26,000* | 23,33,77,000 |
| | | **மூலதனம்** | 12,000 | ... | 12,000 |
| | | **கடன்** | 56,43,000 | ... | 56,43,000 |
| 040 | நீர்வளத் துறை | **வருவாய்** | 23,000 | ... | 23,000 |
| | | **மூலதனம்** | 50,000 | *1,22,55,000* | 1,23,05,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 041 | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | **வருவாய்** | 1,18,000 | *10,59,000* | 11,77,000 |
| | | **மூலதனம்** | 20,47,32,000 | *106,68,31,000* | 127,15,63,000 |
| | | **கடன்** | 94,01,000 | ... | 94,01,000 |
| 042 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | **வருவாய்** | 2,088,89,61,000 | ... | 2,088,89,61,000 |
| | | **மூலதனம்** | 5,000 | ... | 5,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 043 | பள்ளிக் கல்வித் துறை | **வருவாய்** | 821,77,74,000 | ... | 821,77,74,000 |
| | | **மூலதனம்** | 31,44,32,000 | ... | 31,44,32,000 |
| | | **கடன்** | 33,50,000 | ... | 33,50,000 |
| 044 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | **வருவாய்** | 77,31,12,000 | ... | 77,31,12,000 |
| | | **மூலதனம்** | 2,54,97,000 | ... | 2,54,97,000 |
| | | **கடன்** | 51,17,89,000 | ... | 51,17,89,000 |
| 045 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | **வருவாய்** | 27,000 | *5,08,000* | 5,35,000 |
| | | **மூலதனம்** | 17,45,68,000 | ... | 17,45,68,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| 046 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | **வருவாய்** | 11,16,25,000 | ... | 11,16,25,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | 63,00,000 | ... | 63,00,000 |
| 047 | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | **வருவாய்** | 32,48,10,000 | *2,99,99,000* | 35,48,09,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 048 | போக்குவரத்துத் துறை | **வருவாய்** | 766,48,14,000 | ... | 766,48,14,000 |
| | | **மூலதனம்** | 1,000 | ... | 1,000 |
| | | **கடன்** | 1,000 | ... | 1,000 |
| 049 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | **வருவாய்** | 4,000 | ... | 4,000 |
| | | **மூலதனம்** | 61,41,000 | ... | 61,41,000 |
| | | **கடன்** | 2,50,000 | ... | 2,50,000 |
| 050 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | **வருவாய்** | 28,000 | *6,45,38,000* | 6,45,66,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 051 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | **வருவாய்** | 914,11,19,000 | ... | 914,11,19,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 052 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | **வருவாய்** | 8,000 | ... | 8,000 |
| | | **மூலதனம்** | 6,37,41,000 | ... | 6,37,41,000 |
| | | **கடன்** | 9,25,000 | ... | 9,25,000 |
| 053 | சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | **வருவாய்** | 1,000 | ... | 1,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| 054 | வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) | **வருவாய்** | 39,000 | ... | 39,000 |
| | | **மூலதனம்** | 23,27,47,000 | ... | 23,27,47,000 |
| | | **கடன்** | ... | ... | ... |
| | கடன் செலவுகள் | **வருவாய்** | ... | *39,000* | 39,000 |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | ... | ... |
| | பொதுக் கடன்—திருப்பிச் செலுத்துதல் | **வருவாய்** | ... | ... | ... |
| | | **மூலதனம்** | ... | ... | ... |
| | | **கடன்** | ... | *8,000* | 8,000 |

| | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
|---|---|---|---|---|
| **மொத்தம்** | வருவாய் | **8,908,29,23,000** | ***47,67,85,000*** | **8,955,97,08,000** |
| | மூலதனம் | **1,287,53,03,000** | ***117,14,84,000*** | **1,404,67,87,000** |
| | கடன் | **371,19,18,000** | ***8,000*** | **371,19,26,000** |
| **பெருமொத்தம்** | | **10,567,01,44,000** | ***164,82,77,000*** | **10,731,84,21,000** |

## <u>நோக்க–காரண விளக்கவுரை.</u>

இச்சட்ட முன்வடிவானது––

(a) 2021– ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டிற்காக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட துணை மானியங்களையும்;

(b) அந்த ஆண்டிற்காக, மாநிலத் தொகுநிதியத்தின்மீது சாட்டப்பட்ட துணைச் செலவினத்தையும்,

எதிர்கொள்வதற்குத் தேவைப்படும் தொகையை அந்நிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்காக, அரசமைப்புச் சட்டத்தின் 204–ஆம் உறுப்பின் (1)– ஆம் கூறுடன் இணைத்துப் பொருள் கொள்ளப்பட வேண்டிய 205–ஆம் உறுப்பினையொட்டி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்,**
*நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை*
*அமைச்சர்*

தலைமைச் செயலகம்,
*சென்னை,*
2022 மார்ச் 24.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

**2022 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 22/2022**

***2022-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்குகிற நிதியாண்டின் ஒரு பகுதிக்கான பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத் தொகுநிதியத்திலிருந்து குறிப்பிட்டத் தொகைகளை எடுப்பதற்கு வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் எழுபத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. இந்தச் சட்டம், 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு.

2. மாநில அரசு, 2022–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்குகிற நிதியாண்டின் ஒரு பகுதிக்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து குறிப்பிட்ட சில தொகைகளை எடுத்தல்.

(a) இணைப்புப் பட்டியலின் (3)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, 2022–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்குகிற நிதியாண்டின் ஒரு பகுதிக்காக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் முன்னதாக அனுமதிக்கப்பட்ட மானியங்களையும்;

(b) இணைப்புப் பட்டியலின் (4)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டின் மேற்சொன்ன பகுதிக்காக மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்ட செலவினத்தையும்;

எதிர்கொள்வதற்கு தேவைப்படும் தொகையான இரண்டு இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எழுநூற்று எழுபது கோடியே எழுபத்து மூன்று இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாத தொகைகளை மாநிலத் தொகுநிதியத்திலிருந்து எடுக்கலாம்.

3 . தொகுநிதியத்திலிருந்து எடுக்கப்படுவதற்கு 2 – ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ள தொகைகளானவை, அந்த ஆண்டு தொடர்பாக இணைப்புப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். நிதி ஒதுக்கம்

**இணைப்புப் பட்டியல்.**
(2–ஆம் பிரிவைக் காண்க).

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 001 | மாநில சட்டமன்றம் | வருவாய் | 55,31,49,000 | *36,30,000* | 55,67,79,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 65,00,000 | ... | 65,00,000 |
| 002 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | வருவாய் | 33,41,31,000 | *12,31,24,000* | 45,72,55,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 003 | நீதி நிருவாகம் | வருவாய் | 760,07,35,000 | *190,20,70,000* | 950,28,05,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 004 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | வருவாய் | 2,500,49,62,000 | *13,00,34,000* | 2,513,49,96,000 |
| | | மூலதனம் | 269,38,57,000 | ... | 269,38,57,000 |
| | | கடன் | 26,00,000 | ... | 26,00,000 |
| 005 | வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை | வருவாய் | 8,368,95,29,000 | *2,000* | 8,368,95,31,000 |
| | | மூலதனம் | 178,40,60,000 | ... | 178,40,60,000 |
| | | கடன் | 48,86,000 | ... | 48,86,000 |
| 006 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) | வருவாய் | 774,86,96,000 | *1,000* | 774,86,97,000 |
| | | மூலதனம் | 79,51,94,000 | ... | 79,51,94,000 |
| | | கடன் | 26,00,000 | ... | 26,00,000 |
| 007 | மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) | வருவாய் | 358,75,13,000 | *1,000* | 358,75,14,000 |
| | | மூலதனம் | 394,09,53,000 | ... | 394,09,53,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 008 | பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) | வருவாய் | 32,49,36,000 | *1,000* | 32,49,37,000 |
| | | மூலதனம் | 8,75,32,000 | ... | 8,75,32,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 009 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | வருவாய் | 767,14,53,000 | *5,000* | 767,14,58,000 |
| | | மூலதனம் | 32,59,24,000 | ... | 32,59,24,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 010 | வணிகவரிகள் (வணிகவரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 337,98,21,000 | *2,000* | 337,98,23,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | 26,00,000 | ... | 26,00,000 |
| 011 | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிகவரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 253,34,24,000 | *1,000* | 253,34,25,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 012 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 3,357,29,67,000 | *2,000* | 3,357,29,69,000 |
| | | மூலதனம் | 4,000 | ... | 4,000 |
| | | கடன் | 26,01,000 | ... | 26,01,000 |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 013 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 6,154,98,38,000 | *3,000* | 6,154,98,41,000 |
| | | மூலதனம் | 253,71,28,000 | ... | 253,71,28,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 014 | எரிசக்தித் துறை | வருவாய் | 15,185,24,91,000 | *1,000* | 15,185,24,92,000 |
| | | மூலதனம் | 523,11,71,000 | ... | 523,11,71,000 |
| | | கடன் | 1,659,40,25,000 | ... | 1,659,40,25,000 |
| 015 | சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) | வருவாய் | 67,05,15,000 | ... | 67,05,15,000 |
| | | மூலதனம் | 3,43,85,000 | ... | 3,43,85,000 |
| | | கடன் | 2,17,01,000 | ... | 2,17,01,000 |
| 016 | நிதித் துறை | வருவாய் | 1,184,75,17,000 | *12,000* | 1,184,75,29,000 |
| | | மூலதனம் | 479,89,51,000 | ... | 479,89,51,000 |
| | | கடன் | 83,82,74,000 | ... | 83,82,74,000 |
| 017 | கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | 757,16,34,000 | *1,000* | 757,16,35,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | 91,02,000 | ... | 91,02,000 |
| 018 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | 127,35,15,000 | *1,000* | 127,35,16,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 019 | மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை | வருவாய் | 11,970,18,28,000 | *1,10,99,000* | 11,971,29,27,000 |
| | | மூலதனம் | 559,63,61,000 | *1,000* | 559,63,62,000 |
| | | கடன் | 28,00,000 | ... | 28,00,000 |
| 020 | உயர்கல்வித் துறை | வருவாய் | 3,435,44,20,000 | *1,000* | 3,435,44,21,000 |
| | | மூலதனம் | 249,33,30,000 | *1,000* | 249,33,31,000 |
| | | கடன் | 2,000 | ... | 2,000 |
| 021 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | வருவாய் | 1,220,84,48,000 | *1,000* | 1,220,84,49,000 |
| | | மூலதனம் | 10,621,28,48,000 | *1,000* | 10,621,28,49,000 |
| | | கடன் | 16,25,000 | ... | 16,25,000 |
| 022 | காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 6,538,90,13,000 | *2,74,13,000* | 6,541,64,26,000 |
| | | மூலதனம் | 130,00,03,000 | ... | 130,00,03,000 |
| | | கடன் | 13,74,76,000 | ... | 13,74,76,000 |
| 023 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 300,54,58,000 | *1,000* | 300,54,59,000 |
| | | மூலதனம் | 22,19,20,000 | ... | 22,19,20,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 024 | சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 257,85,57,000 | *3,000* | 257,85,60,000 |
| | | மூலதனம் | 3,31,44,000 | ... | 3,31,44,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 025 | இயக்கவூர்திகள் குறித்த சட்டங்கள் – நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 293,69,31,000 | *1,000* | 293,69,32,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 026 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | வருவாய் | 3,614,33,64,000 | *1,000* | 3,614,33,65,000 |
| | | மூலதனம் | 650,00,04,000 | ... | 650,00,04,000 |
| | | கடன் | 1,415,17,37,000 | ... | 1,415,17,37,000 |
| 027 | தொழில் துறை | வருவாய் | 1,525,49,32,000 | *2,000* | 1,525,49,34,000 |
| | | மூலதனம் | 435,89,02,000 | ... | 435,89,02,000 |
| | | கடன் | 162,76,01,000 | ... | 162,76,01,000 |
| 028 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 84,71,68,000 | ... | 84,71,68,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 029 | சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | வருவாய் | 97,26,30,000 | *5,000* | 97,26,35,000 |
| | | மூலதனம் | 62,22,58,000 | ... | 62,22,58,000 |
| | | கடன் | 45,10,000 | ... | 45,10,000 |
| 030 | எழுதுபொருள் மற்றும் அச்சு – (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 105,62,50,000 | *5,87,000* | 105,68,37,000 |
| | | மூலதனம் | 61,13,000 | ... | 61,13,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 031 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | வருவாய் | 129,47,79,000 | ... | 129,47,79,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 26,00,000 | ... | 26,00,000 |
| 032 | தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை | வருவாய் | 1,102,54,35,000 | *4,000* | 1,102,54,39,000 |
| | | மூலதனம் | 427,50,75,000 | ... | 427,50,75,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 033 | சட்டத் துறை | வருவாய் | 49,15,51,000 | ... | 49,15,51,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 26,00,000 | ... | 26,00,000 |
| 034 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | வருவாய் | 7,473,80,54,000 | *2,000* | 7,473,80,56,000 |
| | | மூலதனம் | 5,476,64,40,000 | ... | 5,476,64,40,000 |
| | | கடன் | 309,70,32,000 | ... | 309,70,32,000 |
| 035 | மனிதவள மேலாண்மைத் துறை | வருவாய் | 91,71,25,000 | *60,52,38,000* | 152,23,63,000 |
| | | மூலதனம் | 73,48,000 | ... | 73,48,000 |
| | | கடன் | 1,04,00,000 | ... | 1,04,00,000 |
| 036 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | வருவாய் | 189,09,00,000 | *5,000* | 189,09,05,000 |
| | | மூலதனம் | 80,11,25,000 | ... | 80,11,25,000 |
| | | கடன் | 32,50,000 | ... | 32,50,000 |
| 037 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 129,40,28,000 | *1,000* | 129,40,29,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 038 | பொதுத் துறை | வருவாய் | 330,19,53,000 | *5,000* | 330,19,58,000 |
| | | மூலதனம் | 123,62,56,000 | ... | 123,62,56,000 |
| | | கடன் | 12,32,40,000 | ... | 12,32,40,000 |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 039 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | வருவாய் | 264,44,33,000 | *1,000* | 264,44,34,000 |
| | | மூலதனம் | 764,18,82,000 | ... | 764,18,82,000 |
| | | கடன் | 6,50,000 | ... | 6,50,000 |
| 040 | நீர்வளத் துறை | வருவாய் | 1,982,95,49,000 | *1,000* | 1,982,95,50,000 |
| | | மூலதனம் | 2,783,66,65,000 | *3,25,05,000* | 2,786,91,70,000 |
| | | கடன் | 6,50,000 | ... | 6,50,000 |
| 041 | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | வருவாய் | 5,232,17,51,000 | *8,000* | 5,232,17,59,000 |
| | | மூலதனம் | 52,000 | *1,000* | 53,000 |
| | | கடன் | 28,00,000 | ... | 28,00,000 |
| 042 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | வருவாய் | 14,466,54,17,000 | *3,000* | 14,466,54,20,000 |
| | | மூலதனம் | 2,854,03,63,000 | ... | 2,854,03,63,000 |
| | | கடன் | 9,75,000 | ... | 9,75,000 |
| 043 | பள்ளிக் கல்வித் துறை | வருவாய் | 23,627,84,31,000 | *10,000* | 23,627,84,41,000 |
| | | மூலதனம் | 354,22,67,000 | ... | 354,22,67,000 |
| | | கடன் | 26,00,000 | ... | 26,00,000 |
| 044 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | வருவாய் | 579,95,16,000 | *1,000* | 579,95,17,000 |
| | | மூலதனம் | 3,25,01,000 | ... | 3,25,01,000 |
| | | கடன் | 9,27,46,000 | ... | 9,27,46,000 |
| 045 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை | வருவாய் | 3,814,17,05,000 | *1,000* | 3,814,17,06,000 |
| | | மூலதனம் | 35,12,64,000 | ... | 35,12,64,000 |
| | | கடன் | 26,01,000 | ... | 26,01,000 |
| 046 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 53,59,58,000 | *2,000* | 53,59,60,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 26,00,000 | ... | 26,00,000 |
| 047 | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | வருவாய் | 217,66,79,000 | *3,90,00,000* | 221,56,79,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 048 | போக்குவரத்துத் துறை | வருவாய் | 3,131,78,47,000 | *1,000* | 3,131,78,48,000 |
| | | மூலதனம் | 309,51,23,000 | ... | 309,51,23,000 |
| | | கடன் | 859,11,21,000 | ... | 859,11,21,000 |
| 049 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | வருவாய் | 190,61,65,000 | *1,000* | 190,61,66,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 050 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | வருவாய் | 25,676,30,92,000 | *4,13,17,000* | 25,680,44,09,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 051 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | வருவாய் | 928,21,20,000 | *1,000* | 928,21,21,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்கு *சாட்டப்பட்டது* | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 052 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | வருவாய் | 541,49,19,000 | *1,000* | 541,49,20,000 |
| | | மூலதனம் | 3,05,52,000 | ... | 3,05,52,000 |
| | | கடன் | 16,25,000 | ... | 16,25,000 |
| 053 | சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | வருவாய் | 36,43,35,000 | *1,000* | 36,43,36,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 054 | வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) | வருவாய் | 367,46,22,000 | ... | 367,46,22,000 |
| | | மூலதனம் | 111,86,62,000 | ... | 111,86,62,000 |
| | | கடன் | ... | ... | ... |
| | கடன் செலவுகள் | வருவாய் | ... | *32,897,74,86,000* | 32,897,74,86,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| | பொதுக் கடன்–திருப்பிச் செலுத்துதல் | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | *17,632,98,23,000* | 17,632,98,23,000 |
| | மொத்தம் | வருவாய் | **161,128,61,89,000** | ***33,186,10,95,000*** | **194,314,72,84,000** |
| | | மூலதனம் | **28,284,96,23,000** | ***3,25,09,000*** | **28,288,21,32,000** |
| | | கடன் | **4,534,81,36,000** | ***17,632,98,23,000*** | **22,167,79,59,000** |
| | பெருமொத்தம் | | **193,948,39,48,000** | ***50,822,34,27,000*** | **244,770,73,75,000** |

**நோக்க–காரண விளக்கவுரை.**

இச்சட்ட முன்வடிவானது–

(a) மாநிலத்தின் மதிப்பீட்டுச் செலவினத்தைப் பொறுத்த அளவில், 2022– ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 –ஆம் நாளில் தொடங்குகிற நிதியாண்டின் ஒரு பகுதிக்காக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் முன்னதாக அனுமதிக்கப்பட்ட மானியங்களை எதிர்கொள்வதற்கும்,

(b) அந்த ஆண்டின், மேற்சொன்ன பகுதிக்காக தொகு நிதியத்தின் மீது சாட்டப்பட்ட செலவினத்தை எதிர்கொள்வதற்கும் மேற்சொன்ன தொகைகளை ஒதுக்கீடு செய்வதற்கும்,

தேவைப்படும் குறிப்பிட்ட தொகைகளை மாநிலத் தொகுநிதியத்திலிருந்து எடுப்பதற்கு வகை செய்வதற்காக, அரசமைப்புச் சட்டத்தின் 206–ஆம் உறுப்பினையொட்டிஅறிமுகப்படுத்தப்படுகின்றது.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்,**
*நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை*
*அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
*சென்னை,*
2022 மார்ச் 24.

கி. சீனிவாசன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.